www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu
For answers search this (@vskteaches) in YouTube.

# மூன்றாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2023

Reg No

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 100

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் கொடுக்கப்பட்ட நான்கு வினாக்களில் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து எழுதவும். 15 x 1 = 15

1. "வேலவன் குன்றம் போனாலென்ன? மாலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" - வேலவன் குன்றமும் மாலவன் குன்றமும் குறிப்பவை முறையே

   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

2. அரியவற்றுள் எல்லாம் அரிதே ______ பேணித் தமராக் கொளல்.

   அ) சிறியோரைப் ஆ) மேலோரைப் இ) கீழோரைப் ஈ) பெரியாரைப்

3. மீளாத்துயர் - எதிர்மறையாக மாற்றுக

   அ) மீளும் துயர் ஆ) மீள்துயர் இ) மீண்ட துயர் ஈ) மீளுகின்ற துயர்.

4. மருந்தே ஆயினும் விருந்தொடு உண் - என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நுல் ______.

   அ) குறுந்தொகை ஆ) கொன்றைவேந்தன் இ) திருக்குறள் ஈ) நற்றிணை

5. அழியாத கல் இலக்கியம் எனப் போற்றப்படுவது

   அ) செப்பேடு ஆ) ஓவியம் இ) சிற்பங்கள் ஈ) மெய்க்கீர்த்தி

6. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது

   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

7. பெரியமீசை சிரித்தார் - பெரிய மீசை என்ற சொல்லுக்கான தொகையின் வகை எது?

   அ) பண்புத் தொகை ஆ) உவமைத்தொகை

   இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

8. கம்பராமாயணத்திற்கு கம்பர் இட்ட பெயர் ______.

   அ)இராமாயணம் ஆ)இராமகாதை இ)கம்பராமயணம் ஈ)இராமவதாரம்

9. சதம் என்றால் ______ என்று பொருள்

   அ) பத்து ஆ) நூறு இ) ஆயிரம் ஈ) இலட்சம்

10. சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக சாகித்தய அகாதெமி விருது பெற்றவர்

    அ) புதுமைப்பித்தன் ஆ) ஜெயகாந்தன் இ) கண்ணதாசன் ஈ) வைரமுத்து

11. ம.பொ.சிக்கு பெற்றோர் இட்ட பெயர் ______.

    அ) சிவஞானம் ஆ) ஞானப்பிரகாசம் இ) பிரகாசம் ஈ) பொன்னுசாமி

*பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.*

வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்

12. இப்பாடலின் ஆசிரியர் யார்?

    அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள் இ) கண்ணதாசன் ஈ) அதிவீரராம பாண்டியர்

13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்?

    அ) காசிக்காண்டம் ஆ) கொய்யாக்கனி

    இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமயணம்

For answers search this (@vskteaches) in YouTube. www.vskteaches.xyz
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

For answers search this (@vskteaches) in YouTube.
www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



14. வண்ணமும் கண்ணமும் - இலக்கணம் தருக

அ) எண்ணும்மை ஆ) வினைமுற்று இ) பெயரெச்சம் ஈ) உம்மைத்தொகை

15. விரை என்பதன் பொருள்.

அ) மனம் ஆ) மணம் இ) உள்ளம் ஈ) மேகம்

பகுதி - II

பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி: 4 x 2 = 8

*வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.*

16. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

17. விடைக்கேற்ற வினாவினை அமைக்க

அ) இந்திய தேசிய இராணுவத்திற்கு மக்கள் ஆதரவு பெருகியது

ஆ) அரசர்களின் வரலாற்றைக் குறிப்பிடுவது மெய்க்கீர்த்தி என்று அழைக்கப்படும்.

18. காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன் - உவமை உணர்த்தும் கருத்து யாது?

19. இறடிப் பொம்மல் பெறுகுவீர் - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக

20. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒலித்தண்டுகள் - இக்கவிதை உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

21. "உலகு" என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி: 5 x 2 = 10

22. ***சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் எழுதுக.***

அ) வருந்தாமரை ஆ) பிண்ணாக்கு

23. முல்லைக்குரிய கருப்பொருள் நான்கினை எழுதுக

24. விடு - வீடு ***இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக***

25. அமர்ந்தான் - ***பகுபத உறுப்பிலக்கணம் தருக***

26. கலைச்சொல் தருக. அ) Cabinet ஆ) Irrigation

27. ***இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***

அ) மலை - மாலை ஆ) வளி - வாளி

28. வினாக்களின் வகைகள் யாவை?

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6

29. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இது போல இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான், முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றி பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப்பற்றி பேசினால் உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

31. ***உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.***

கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க மாலுமி ஹிப்பாலஸ் இவர் பருவக்காற்றின் உதவியால் முசிறி துறைமுகத்திற்குப் புதிய வழியைக் கண்டுபிடித்தார். விரைவான பயணத்துக்கு இப்புதிய வழி உதவியதால் யவனக் கப்பல்கள் சேரர்களின் முசிறி துறைமுகத்திற்கு அதிகமாக வந்தன.

For answers search this (@vskteaches) in YouTube. www.vskteaches.xyz
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu
For answers search this (@vskteaches) in YouTube.



அ) ஹிப்பாலஸ் என்பவர் யார்?

ஆ) யவனக் கப்பல்கள் எங்கு வந்து சேர்ந்தன?

இ) முசிறி துறைமுகத்திற்கு வழியைக் கண்டுபிடித்தவர் யார்?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2 x 3 = 6**

***(34வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)***

32. சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது - இடஞ்சுட்டிப் பொருள் கூறுக.

33. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலை மலைபடுகடாம் வழி விளக்குக.

34. அ) சிறுதாம்புத் தொடுத்த எனத் தொடங்கும் முல்லைப்பாடலை எழுதுக

*(அல்லது)*

ஆ) தண்டலை மயில்களாட எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக

## பிரிவு - 3

**2 x 3 = 6**

35. வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு - ***இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.***

36. வழுவமைதி என்றால் என்ன? அதன் வகைகளை உதாரணத்துடன் விளக்குக

37. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. ***- இக்குறளை அலகிட்டு வாய்பாடு தருக.***

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5 x 5 = 25**

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக

*(அல்லது)*

ஆ) மின்னனுப் புரட்சிக்கான காரணங்களை விளக்குக.

39. அ) உணவு விடுதியொன்றில் தரப்பட்ட உணவு தரமற்றதாக இருந்ததை எண்ணி உரிய அலுவலருக்கு புகார்க் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

ஆ) மாற்றுச் சான்றிதழ் வேண்டி உமது தலைமைஆசிரியருக்கு விண்ணப்பம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை கவிதைவடிவில் எழுதுக.



41. விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நம்பர் 8 பாரதி தெருவில் வசிக்கும் ராமநாதன் மகன் ரவி என்பவர் நூலக உறுப்பினராக சேர படிவம் நிரப்புக.

For answers search this (@vskteaches) in YouTube. www.vskteaches.xyz
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

For answers search this (@vskteaches) in YouTube.
www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



42. அ) நிகழ்கலைகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் உங்கள் ஆலோசனைகளை எழுதுக.

*(அல்லது)*

ஆ) *மொழிபெயர்க்க:*

Therukoothu is as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 3 x 8 = 24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை விரிவாக எழுதுக.

*(அல்லது)*

ஆ) சங்க இலக்கியங்கள் கூறும் தமிழரின் கொடைத்திறம் பற்றிய கருத்துகளை விவரிக்க.

44. அ) *குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் நாடகம் எழுதுக.*

மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்கவேண்டும் கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.

*(அல்லது)*

ஆ) அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் கதையை கருப்பொருள் குன்றாமல் விவிரக்க.

45. அ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை அல்லது கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

*(அல்லது)*

ஆ) நாட்டுவிழாக்கள் - விடுதலை போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு

குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

******

For answers search this (@vskteaches) in YouTube. www.vskteaches.xyz
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com